Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி -28 15-10-2003 புதன்கிழமை ஓசை 239

படைக்குநர்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (கி-8628) கிளிநொச்சி.

# டென்மார்க் வெளிவிவகார அமைச்சு பிரதிநிதிகள்-புலிகள் சந்தித்துப் பேச்சு!

## கோப்பென் கேகனிலிருந்து புலிகள் நேற்று நோர்வே புறப்பட்டனர்

(கோப்பென் கேகன்)

**டென்மார்க்கில் நேற்றுக்காலை டென்மார்க் வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளுக்கும் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இப்பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதும் விடுதலைப் புலிகள் குழுவினர் நோர்வே புறப்பட்டுச் சென்றனர்.**

டென்மார்க்சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த நாட்டின் அரச தலைவர்களைச்சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர். தமது அயர்லாந்து பயணத்தை முடித்துக் கொண்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் டென்மார்க் சென்றிருந்தமை தெரிந்ததே. அங்கு நேற்றுக் காலை டென்மார்க்கின் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளைச் சந்தித்த விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடத்தினர். இந்தப்பேச்சு வார்த்தை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டு மாலை நோர்வேசெல்லும் விடுதலைப்புலிகள் அந்த

(08 ஆம் பக்கம் பார்க்க...)



## இராணுவ ஆட்சியின் கீழ் வாழும் உணர்வையே யாழ். குடாநாட்டு மக்கள் கொண்டுள்ளனர்

### க.கா. குழு அரசியல் ஆலோசகரிடம் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டிருந்த போதிலும் தமிழ் மக்கள் குடாநாட்டில் இராணுவ ஆட்சி ஒன்றின் கீழேயே வாழ்ந்து வருகின்ற உணர்வைக் கொண்டிருப்பதாக இளம்பரிதி கண்காணிப்புக் குழுவின் ஆலோசகருக்குத் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கான பயணமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரை யாழ். பொற்பதி வீதியிலுள்ள அரசியல்துறை அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினார் காலை 9.30 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, மகளிர் அரசியல்துறைப்

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## - குரங்குபாஞ்சான் செல்ல முயன்ற -
## சிஹல உறுமய எடுத்த முயற்சி படையினரால் தடுக்கப்பட்டது

குரங்குபாஞ்சான் முகாமை நோக்கி பேரணி நடத்திய சிஹல உறுமயவினர் சூரங்கல் என்ற பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ன தலைமையில் 30 புத்த பிக்குகள் அடங்கிய 300 பேர் கொண்ட குழுவினர் நேற்றுக் காலை குரங்குபாஞ்சான் குளத்திலுள்ள விடுதலைப்புலிகளின் முகாமிற்கு மேற்கொண்ட எதிர்ப்பு பேரணி இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனைத்

(08 ஆம் பக்கம் பார்க்க...)

### அமைச்சர்கள் வருகை

இந்திய, கனேடிய வெளியுறவு அமைச்சர்கள் நேற்று சிறிலங்கா வந்தடைந்தனர். நாளை ஆரம்பமாகவுள்ள இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்கவுள்ளார். அத்துடன் சிறி

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## க.கா.குழு தலைமையின் கவனத்திற்கு யாழ். இராணுவ வாகன விபத்துக்கள்

### க.கா.கு.அரசியல் ஆலோசகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வரும் இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையின் கவனத்திற்குத் தாம் கொண்டு வந்திருப்பதாக அவ்வமைப்பின் ஆலோசகர் ஜெயஸ் யோவேர்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுதலைப்புலிகளைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களது கேள்விக்குப் பதிலளிக்கையில்,யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உள்ளிட்ட குழுவினருடனான சந்திப்பு மிகவும்பயனுள்ளதாக

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## சிறில. கடற்படையின் தாக்குதல்வலிமையை மேம்படுத்த இஸ்ரேலிய நிபுணர்கள் வருகை

சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதல் படகுகளின் தாக்குதல் வலிமையை அதிகரிக்கும் வகையில் ஆலோசனைகளை வழங்குவதற்காக இஸ்ரேலிய கடற்படை நிபுணர்கள் சிறிலங்கா வந்துள்ளனர்.

இவர்கள் சிறிலங்காக் கடற்படையினரின் வள்ளங்கள் மற்றும் கப்பல்கள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர்,அவற்றின் தாக்குதல் வலிமையை அதிகரிக்கச் செய்யும் வகையில் பீரங்கிகளை பொருத்துவது தொடர்பான பரிந்துரையை வழங்கவுள்ளனர் ஏற்கனவே இந்தப்பீரங்கிக் கொள்வனவு தொடர்பாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கு சிறிலங்கப் பாதுகாப்புஅமைச்சர் விஜயங்களையும் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## - மன்னாரில் இன்று -
## பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வாக மூன்று இடங்களிலிருந்து பேரணி

(மன்னார்)

இன்று நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்வையொட்டி மன்னார் நகர் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

நகரெங்கும் மஞ்சள், சிகப்புக் கொடிகள் கட்டப்பட்டு பிரதான வாயில்களில் வளைவுகள் கட்டப்பட்டுள்ளன.

மூன்று இடங்களிலிருந்து ஆரம்பமாகும் மக்கள் பேரணிகள், மன்னார் பொது மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு நிகழ்வுகள் இடம்பெறும். எழுத்தூர் அ.த.க. பாடசாலையிலிருந்து ஒரு பேரணியும் புனித செபஸ்ரியார் தேவாலயத்திலிருந்து ஒரு பேரணியும், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலிருந்து மற்றொரு பேரணியுமாக மூன்று பேரணிகள் பொதுமைதானத்திற்கு வரவுள்ளன.

அங்கு"எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற தொனிப்பொருளில் பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது. (மீ)

## சாவடைந்த போராளியின் இறுதி நிகழ்வை நடாத்த படையினர் பெரும் முட்டுக்கட்டை

### வவு. அரசியல் துறையினர் விசனம்

(செட்டிகுளம்)

சாவடைந்த போராளியின் இறுதி நிகழ்வை நடத்தும் விடயத்தில் இராணுவம் மிகமோசமாக நடந்து கொண்டதாக விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியல்துறையினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

11.10.2003 முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் ஆழிவேந்தன் என்ற போராளியின் வித்துடலினை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வவுனியாவிற்கு கடந்த திங்கட்கிழமை வரி உடுப்புடனும், புலிக்கொடி போர்த்தப்பட்ட நிலையிலும் கொண்டுவந்தபோது இராணுவம் அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் செவ்வாய்க்கிழமை காலை சாதாரண உடையில் போராளியின் வித்துடல் புலிக்கொடிபோர்த்தநிலையில் கொண்டு வரப்பட்ட போது இராணுவம் மீண்டும் அனுமதி வழங்கவில்லை. புலிக்கொடி,வரிஉடையுடன் கொண்டுவருவது போர்நிறுத்த மீறல் என்று இராணுவமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் தெரிவித்திருந்தனர். இதற்கு

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

தியாகு-கணேஷ்ராஜ் என்பவரது பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் 06.10.2003 ஆம் திகதியன்று பரந்தனுக்கும், முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருகிலுள்ள காவல்துறைப் பணி மனையிலோ அல்லது புத்தடி, விசுவமடு என்னும் அவரது சொந்த முகவரிக்கோ தகவல் தரவும். T.P - 021-226-3685. (3843)

### MD-90 விற்பனைக்குண்டு

பாவித்த MD-90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. விலை 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவை. தொடர்பு: அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சி. (3844)

## க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

2004ஆம் ஆண்டு நடை பெறவுள்ள க.பொ.த.உ/த பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம் மாதத்திலிருந்து நவம்பர் 05ஆம் திகதிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

### வீதிஒழுங்கு நூல்

ஓட்டுநர் அனுமதி பெறுவதற்கு வீதி ஒழுங்கு நூல் 45/= சகல ஈழத்து வெளியீடுகளும் இந்திய அறிவியல் நூல்கள், குழந்தைகளுக்கான நூல்கள், தேவநேயப்பாலவணின் நூல்கள் அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (3841)

## இத்தாலி செல்ல முயன்ற மேலும் 5 பேருக்குப்பிணை

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிசெல்ல முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5பேருக்கும் மேன்முறையீட்டு நீதி மன்றம் பிணையில் செல்ல அனு மதி வழங்கியுள்ளது.

இவர்கள் கடந்த எட்டு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர். ஏற்கனவே இவர்களுடன் விளக்க மறியலில் இருந்த 36 பேருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேவராஜா ஸ்ரீகாந்தன், கா.கேதீஸ்வரன்,செல்வரட்ணம் கனகராஜா, சண்முகராஜா சுரேஸ் குமார்,அ.பிரதீப் ஆகிய ஐந்து பேருமே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.


## தமிழீழ வைப்பகம் வழங்கும் துரித நகையடைவுக் கடன் சேவை

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

- குறைந்த வட்டி
  - மாதாந்தம் 1.66% வீத வட்டி மட்டுமே தற்போது அறவிடப்படுகிறது
- கூடிய தொகை
  - தற்போது கடன்தொகையாக ஒரு பவுணுக்கு உரூபா 6,300/- வரை வழங்கப்படுகின்றது.
- நீடித்த சேவை
  - தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் மாலை 3.00 மணி வரை நகையடைவுக் கடன் சேவையை வழங்குகின்றோம்.

* உங்கள் வைப்புக்களிற்கு அதிக வட்டி –

*ஏன்?? உங்கள் நிறைவே எங்கள் மகிழ்ச்சி.*

* எங்கள் கடன் வசதிகளிற்கு மிகக் குறைந்த வட்டி

*ஏன்?? உங்கள் மகிழ்ச்சியே எங்கள் நிறைவு –*

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்.

**தமிழீழ வைப்பகம்**

தமிழீழ வைப்பகம்,
தமிழரின் காப்பகம்

(சி-8649)


## மருதநகர் தானியலக்ஸ்மி கமம் பயிர்ச்செய்கையாளர் கலந்துரையாடல்

மருதநகர் தானிய லக்ஸ்மி கமம் 2003 காலபோக நெற்செய்கை சம்பந்தமான பயிர்ச் செய்கையாளர்களுடன் கலந்துரையாடல் எதிர் வரும் 2003.10.26ஆந் திகதி காலை 10.00 மணிக்கு பேராசிரியர் சி.க. சிற்றம் பலம் அவர்களின் தலைமையில், கமவளாகத்தினுள் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு இக்கமத்தில் பயிர்ச் செய்கையிலீடுபடும் சகல விவசாயிகளையும், தவறாது கலந்து கொள்ளுமாறு கரைச்சிப்பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன் வேண்டியுள்ளதுடன் இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளவுள்ளமையினால், கமத்திற்குள் எதுவித வேலைகளும் மேற்கொள்ளவேண்டாமென வேண்டியுள்ளார். மேலும் 2003 சிறுபோக வேளாண்மை மேற்கொண்டவர்கள் குத்தகையினை மருதநகர் கிராம அலுவலரிடம் தொடர்பு கொண்டு ஒப்படைக்குமாறு வேண்டிக்கொண்டுள்ளார். (சோ)

## விளையாட்டுப்பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளுக்குச் சான்றிதழ்

(மல்லாவி)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டு அலுவலக அமைச்சினால் தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைமன்றத்தினால் நடாத்தப்பட்ட மூன்றுநாட்கள் விளையாட்டுப்பயற்சிப் பட்டறையின் நிறைநாளும் சான்றிதழ்வழங்கும் நிகழ்வும் மல்லாவியோகபுரம் ம.வி.மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் பற்பகல் 4.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் செயலாளர் சண்முக வடிவேல் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரைகளை இதில் உதவிகல்விப் பணிப்பாளர் முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கானகன், முறைசாரா கல்விப் பணிப்பாளர் பிறேமச்சந்திரன், மு/யோகபுரம் மகா.வி.அதிபர் திருமதி கிருஷ்ணபிள்ளை முல்லை மாவட்ட மெய்வல்லுநர் உத்தியோகத்தர் முகுந்தன் ஆகியோர் வழங்கினர். 3நாள் பயிற்சியை நிறைவு செய்த 40 இளைஞர்,யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (24)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சாவு
15.10.2001

கிராமியப்படை
உறுப்பினரும்,
நாட்டுப்பற்றாளருமான

**இராசேந்திரம் சிவகுமார்**

**8ஆம் கட்டை அக்கராயன்**

பெற்றோருக்கு பிள்ளையாய் வேர்களாகவும்
விழுதுகளாகவும், துணைகளாகவும்
விடுதலைநோக்கோடு நின்று உழைத்த எம் கிராமியப்படை
வீரனை நாம் என்றென்றும் மறவோம்.

கிராமியப்படை
உறுப்பினர்களும்
நிர்வாகத்தினரும்.

(3104)

## 12ஆம்ஆண்டு நினைவு மலர்



மலர்வு
27 - 04 - 1962

உதிர்வு
15 - 10 - 1991

**திருமப்புதல்வி**
சிவகௌரி அம்மன்
[இலக்கணாவத்தை, வல்வெட்டித்துறை]

பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலரும்
குறிஞ்சி மலரே!
பன்னிரெண்டு ஆண்டுகளும் ஈழநாதத்தில்
மலர்ந்தது எம் நினைவு மலரே!

"ரியோ சுவையகம்"
விசுவமடு.

பிரிவால் துயருறும்
அன்பு மலர்கள்.

(3102)


## பணி நிலை வேண்டுகை

வருவாய்ப் பகுதியின் ஆளுகையிலுள்ள புளியங்குளம், கிளிநொச்சி, வட்டக்கண்டல், பளை ஆகிய பகுதிகளிலுள்ள செயலகப் பணிக்குக் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தங்களது தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2003-10-20ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**பணிநிலைகள்:**

| | | |
|---|---|---|
| 01. ஆளுகை மேலாளர் | 02. உள்ளகக் கணக்காய்வாளர் | 03. கணக்குப் பதிவாளர் |
| 04. எழுதுநர் | 05. வெளிக்களப் பணியாளர் | 06. வரி அறவீட்டாளர் |

**கல்வித் தகைமை**

*பணிநிலை 01, பணிநிலை 02.*

ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு அல்லது உயர் தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த. (உ/த) உடன் ஐந்தாண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

*பணிநிலை 03, பணிநிலை 04.*

க.பொ.த. (உ/த) அல்லது க.பொ.த. (சா/த) உடன் மூன்றாண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

*பணிநிலை 05, பணிநிலை 06.*

க.பொ.த. (சா/த) அல்லது ஓராண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

**வேண்டுகைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப் பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

நாள் : 2003-10-25
நேரம் : காலை 09.00 மணி,
இடம் : வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ். சாலை, பளை.

நாள் : 2003-10-26
நேரம் : காலை 09.00 மணி,
இடம் : வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ்.சாலை, கிளிநொச்சி.

குறிப்பு : நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

**ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப் பகுதி.**

(சி-8654)


# பொலிவியாவில் சனாதிபதியை பதவி விலக்க பொதுமக்கள் வீதிகளிலிறங்கிப் போராட்டம்!

## மோதல்களில் 10பேர் உயிரிழப்பு

**பொலிவியா நாட்டின் சனாதிபதி கொன்சாலோசன்சஸ் டி லொசாடாவை எதிர்த்து நடந்துவரும் போராட்டத்தில் 10 பேர் பலியாகி யுள்ளார்கள்.**

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்த்து மக்கள் சனாதிபதி கொன்சாலோ சன்சஸ் டி லொசாடா பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்திப் போராட்டம நடத்தி வருகின் றார்கள்.

இந்தப் போராட்டங்கள் பெரும் கலவரமாக மாறிவருகின்றன.



பொலிவியா சனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோரை கட்டுப்படுத்த வரவழைக்கப்பட்ட ராணுவத்தினர் தமது கடமையை முடித்து ஓய்வெடுக்கின்றனர்.

பொலிவியாவின் தலைநகர் லாப்பாசில் நேற்று முன் தினம் பாரம்பரிய ஆயுதங்க ளுடன் மக்களும், போராட்டக் குழுக்களும் அணிதிரண்டு போராட்டம் நடத்தினார்கள்.

இவர்களுக்கும் காவல்துறையினருக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் பெரும் கலவரமாக மாறியது.

துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு என தாக்குதல்களை காவல்துறையினர், மக்களும் போராட்டக்குழுக் களும் கலைந்துபோவதற்காக நடத்தியுள்ளார்கள்.

இந்தக் கலவரத்தில் குறைந்தது 10 பேராவது பலியாகி இருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது. தீக்காயங்களுடன் அதிகமானவர்கள் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாளுக்கு நாள் போராட்டம் வலுத்து வருகின்றது. இதனால் பொலிவியா முழுவதும் பதற்றம் நிலவுகின்றது.

## பேருந்துவிபத்து!

அமெரிக்காவில் லூஸியானா மாகாணத்தில் நேற்று முன்தினம் பேருந்து விபத்தில் 06 பேர் உயிரிழந்துள்ளார்கள். அமெரிக்காவின் ஷெஸ்ஸோஸ பகுதியிலுள்ள தேவாலயத்தைச் சேர்ந்த 15 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்து, பலூலாக் வீதியில் எதிரேவந்த பேருந்துடன் மோதியது.



சில தினங்களுக்குமுன் பலஸ்தீன காஸாப் பகுதி அகதிமுகாமில் தேடுதல் நடத்திய இஸ்ரேல் ராணுவத்தினரை எட்டிப் பார்க் கும் பலஸ்தீனச் சிறுவன் (தேடுதலின்போது ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தும் எட்டுப்பேர் உயிரிழந்தும் உள்ளனர்.)

# கொங்கோவில் மின்னல் தாக்கி 11 மாணவர்கள் உயிரிழப்பு!

## 85பேர் காயமடைவு

கொங்கோவில் மின்னல் தாக்கியதில் 11பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன் 85பேர் காயமடைந்துள்ளனர்.

கொங்கோ நகரான விக்டோபிஸில் உள்ள பாடசாலை ஒன்றின் மீதே மின்னல் தாக்கியுள்ளது. சுமார் 200 மாணவர்கள் மின்னல் தாக்கியவேளை கல்விகற்றுள்ளனர். காயமடைந்த 85பேரில் 25மாணவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# "நேட்டோ" அமைதிகாக்கும் படையினர் ஆப்கானில் எப்பகுதியிலும் செயற்படலாம்

## ஐ.நா.பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

"நேட்டோ" தலைமையிலான அமைதிகாக்கும் படையை ஆப்கானிஸ்தானில் எப் பகுதியிலும் நிலைநிறுத்த அனுமதி வழங்கும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ளது.

படையினர் இதுவரை தலைநகர் காபூலையும் அதனை சுற்றியுள்ள பிரதேசங்களையும் விட்டு வெளியே செல்ல முடியாத நிலை காணப்பட்டது. ஆப்கானிஸ்தான் சனாதிபதி ஐ.நா.சபையில் நீண்ட காலமாக இத்தகைய மாற்றத்தை எதிர் பார்த்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

அந்நாட்டில் பல பகுதிகளில் தலிபான் கிளர்ச்சியாளர்களுக்கும், உள்ளூர் படைகளுக்குமிடையே கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவே நேட்டோ படைகளுக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்துள்ளன.



ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் சீர்திருத்த நடவடிக்கையால் பதவி யிழந்த ஊழியர்களை மீண்டும் பணியில் சேர்க்குமாறு கோரி சனாதிபதி மாளிகைமுன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆப்கானிஸ்தானிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.


## 3-வது ஏவுகணை பரிசோதனை

(புதுடில்லி)

அணுகுண்டுகளை ஏந்திச் செல்லும் ஸகிர்1 ரக ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று இரண்டாவது தடவையாக பரிசோதித்துப் பார்த்துள்ளது.

இந்த ஏவுகணை 700 கிலோ மீற்றர்ருக்கப்பாலுள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது. ஸகிர்1 ஏவுகணைப்பரிசோதனை நேற்றுடன் முடிவடைந்துள்ளதாக இராணுவ செய்தியாளர் கூறியுள்ளார்.

அத்துடன் இவ் ஏவுகணைகளை விட இன்னும் அதிக தூரம் அணுகுண்டுகளை தாங்கிச் செல்லக்கூடிய ஸ்காட் ஏவுகணைகளைப் பரிசோதிக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



முதன் முதலாகப் பிரிட்டன் விமானப்படை இந்தியா விமானப் படையுடன் இணைந்து புதுடில்லிக்கு அண்மையில் நடத்தும் விமான சாகசங்கள்.

# பழிவாங்கும் தாக்குதலுக்கு பலஸ்தீனர் சூளுரைப்பு

இஸ்ரேலியப் படையினரின் முற்றுகையால் தாக்கப்பட்ட காஸா பள்ளத்தாக்கிலுள்ள முகாமிற்கு அருகே ஆயுதபாணிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலுக்கு பழி வாங்கப்போவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சூளுரைத்துள்ளார்கள். இஸ்ரேலிய படையினர் உலங்கு வானூர்திகளின் துணையோடு நடத்திய தாக்குதல்களினால் இவ் அகதி முகாம்பெரியளவு சேதமாகி சுமார் 1200பேர் வீடுகளை இழந்துள்ளமை தெரிந்ததே.

கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காகவே இத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் முதலீடுகளுக்கான வாய்ப்பு ஈராக்கில் இல்லை

## - அமெரிக்கா அறிவிப்பு

ஈராக்கில் தனியார் நிறுவனங்கள் தற்போதைய சூழ்நிலையில் முதலீடுகளை மேற்கொள்ள முடியாதென அமெரிக்க வர்த்தக செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாக்தாத்திற்கு விஜயம் செய்துள்ள அவர் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே இதனைக் கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக ஈராக்கில் இடம்பெற்று வரும் தாக்குதல்கள் முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்மேலும் கூறியுள்ளார். ஆயினும் ஈராக்கில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்கள் விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

தற்போதையசூழ்நிலையில் முதலீடுகள் மேற்கொள்வது பொருத்தமானதல்ல என அவர் சுட்டிகாட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# ஐ.நா.விற்கு அதிக பங்களிப்பை வழங்க இஸ்லாமிய வெளிநாட்டு அமைச்சர்கள் முடிவு

(கோலாலம்பூர்)

இஸ்லாமிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மலேசியாவில் கூடியுள்ளனர்.

அங்கு நடைபெறும் உச்சி மாநாடு தொடர்பான தீர்மானத்தை திருத்தி அமைத்து ஐ.நாடுகள் சபைக்கு அதிகம் பங்களிப்பை வழங்கவேண்டுமென அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளை இஸ்லாமிய மாநாட்டமைச்சின் இரண்டு நாள் உச்சி மாநாடு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டபயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர் அதிக முஸ்லிம் தலைவர்கள் பங்குகொள்ளும் மாநாடாக இது அமைகிறது.

# விழிப்பு வந்தால்

"நாம் கேட்டு ரசித்த சுரங்களோ ஏராளம். என்றாலும் கேட்கப்படாதவை இன்னும் ஏராளம்" என்கிறார் ஒரு மேல் நாட்டுக் கவிஞர். இது எவ்வளவு உண்மையான கூற்று. இதை இன்னொரு வகையிற் சொல்வதானால் பொதுவாக மனிதர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் வலுவற்றவர்களின் பிரச்சினைகளைப் பற்றி யாரும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

அவசரமாகச் சுழலுகின்ற இன்றைய உலகத்தில் அவரவர் தங்கள் அலுவல்களைக் கவனிக்க முடியாமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக ஓடுகின்ற உலகத்தைச் சிந்திக்க வைப்பதற்காகவே உலக அளவில் பல தினங்கள் அனுட்டிக்கப்படுகின்றன. இந்த வகையில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு நாளும் அனுட்டிக்கப்படுகின்றது.

"எண்சாண் உடம்பிற் சிரசே பிரதானம் என்றால்" அச்சிரசினுட் கண்ணே மிகமிகப் பிரதானமாகும். கண்களை மூடிக்கொண்டு இரண்டு அடிகளை முன்னால் எடுத்து வைத்துப் பாருங்கள். இப்போது அதிலுள்ள இடர்பாடுகள் உங்களுக்குத் தானாகவே விளங்கும். வெளிச்சமில்லாத இரவில் எல்லாமே நின்று விடுவதன் காரணமும் இது தான். கண்பார்வை யற்றவர்கள் கையில் வைத்திருப்பது வெள் ளைப் பிரம்பு என்பதைக் கூடப் பொது மக்களிற் பலர் இன்னமும் அறியா

**சு.சிவராஜா**
**ஆசிரியர்**
**(மு/தண்ணீரூற்று இ.த.க.பா)**

மல் இருக்கின்றார்கள். "இதனை வைத்துத் தட்டிக்கொண்டு போறது உங்களுக்கு வருத்தம் தானே" என்று ஒருவர் கேட்டார். விசயம் அறிந்த ஒருவர் உந்தாளை ஒருக்கால் தெருவிலை பிடிச்சுவிடு தம்பி என்றார். அவன் அதற்கு "கையில் வைச்சிருக்கிற கட்டையால் அடிச்சுப் போடுவார்" என்றான். "இன்னொருவர் உந்தாள் கண் தெரியாமல் என்னண்டடா போகுது" என்று கேட்டார் ஒருவர். அந்தாள் வைச்சிருக்கிற தடியில ஏதோ விசயம் இருக்க வேணும் என்றார் மற்றவர்.

ஒருநாள் இப்படியான எத்தனையோ திறனாய்வுகளைக் கேட்டுக்கொண்டு தொடர்ந்து சென்ற போது நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளில் தட்டி விடுகிறேன். காலிலும் நல்ல அடி. "என்ன சேட்டையா விடுகிறாய்" சைக்கிளின்ர விலை தெரியுமே? தட்டிப்பார்க்காமல் போகேலாதோ? என்று சீறுகிறார் வண்டிக்காரர். நிறுத்தி வைத்த மோட்டார் சைக்கிளில் இடிபட்டுப் புணர்நிர்மாணக்காரர்கள் கொட்டி வைத்த மக்கிப் புட்டிகளில் இடறுப்பட்டுக் களைத்து ஒரு தேத்தண்ணி குடிக்கவெண்டு தேத்தண்ணிக் கடைக்குப் போனேன். தேத்தண்ணிக்குச் சொல்லிவிட்டுக் கொஞ்சநேரம் காத்திருந்து பொறுக்க முடியாமல் மீண்டும் தேத்தண்ணி என்றேன். "என்னண்ணை எத்தனை பிளேன்ரீ குடிக்கப் போறியள்" என்றான் சப்பிளையர் ஓடர் பண்ணிய வுடனேயே சத்தமில்லாமல் பிளேன்ரீ யைக்கொண்டு வந்து வைத்து விட்டுப் போன அவனுடைய சுறுசுறுப்பைப் பாராட்டினேன். என் கையால் தடவி எடுத்துக் குடித்தேன். யாருக்கோ போட்டு வைத்த பிளேன்ரீயை என் தலையில் கட்டியடித்துவிட்டார் என்பது வேறு விசயம்.

ஒருபடியாக அங்கிருந்து வெளியே வந்து பார்த்தால் றைக்கோடிங் பாரில் பாட்டுச்சத்தம் காதைப் பிளக்கிறது. சத்தமோ சமநிலைக்குச் சவால்விடுகிறது. சரிப்படுத்திச் சமாளிக்க முயல்கிறேன். நடுறோட்டில் ஏதோ வாகனமொன்று பிறேக் போட்டு நிற்கிறது. உள்ளிருந்தபடியே "உந்தாளைப் பிடிச்சு ஒரு பக்கமாக விடுங்கோ" என்று சாரதி கத்துகிறார். வீடுகளிலிருக்கிறதுக்கு ஏன்தான் வெளிக்கிட்டு வந்து மற்றவையளை மறியலிலை வைக்கப் பாக்கிறியள். விசயம் எல்லாம் சரிதான் நியாயமான கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு நடந்தேன். இப்போது நான் ஒரு புத்தகம் வாங்க வேண்டும் என்று ஞாபகம் வந்தது. புத்தகக் கடைக்குள் புகுந்து கேட்டேன். எத்தனையோ புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறம். எல்லாத்தையுமே ஞாபகம் வைத்திருக்க இயலாது. உள்ளுக்கை வந்து பாருங்கோ என்கிறார் கடைக்காரர். பரிதாபமாக அவரைப் பார்ப்பதைத் தவிர வேறு என்னத்தை என்னால் செய்ய முடியும்?



இன்றைக்கு நரிதான் முழிவியளம் போலிருக்கிறது. அதையும் சரியாகச் சொல்ல முடியாது, ஏதோ ஒரு பேச்சுக்குத்தான் சொல்கிறேன். புத்தகக் கடையிலிருந்து எரிச்சலோடு இறங்கினேன். காலைத் தவறி கானுக்குள் வைத்துவிட்டேன், நல்ல வேளையாக அது ஆழமாக இருக்கவில்லை. இரண்டு சிராய்ப்புக் காயங்களோடு தப்பிவிட்டேன். இதற்கு மேல் எதுவும் வேண்டாம் என்று அலுத்துக் கொண்டு பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தேன். ஒரு மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கின்ற கடையில் ஒரே இரைச்சல் போதாக்குறைக்கு ஒரு மின்பிறப் பாக்கியும் சேர்ந்து இந்தக் காலத்துச் சினிமாப் பாட்டைப் பாடுவது போல இரைந்தது. நடு றோட்டில் நின்று ஏற்கனவே வாகனச்சாரதியிடம் வாங்கிக் கட்டியது மனதிலே இருந்தது. இதனால் அப்படியே நின்றபடியாரும் நிக்கிறியளோ என்று தொண்டை கிழியக் கத்தினேன். ஒரு வயதான புண்ணியவான் வந்து கைகொடுத்தார்.

அந்தக் கண்டத்தையும் கடந்து ஒரு படியாகப் பேருந்து நிலையத்தைச் சேர்ந்தேன். பேருந்து வந்து நின்றதும் எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு ஏறினார்கள். ஆண்களோடு பெண்களுக்கும் சம உரிமை இல்லையென்றுயார் சொன்னார்கள். ஆனால் நான் இதில் எந்தப் பிரிவு என்று விளங்காமல் தவித்தேன். சுகமில்லாத ஐயாவுக்கு இடம் குடுங்கோ என்று அங்கே வந்த நடாத்துநர் கத்தினார். "நான் எப்படி ஐயா ஆனேன்" எப்போது எனக்குச் சுகயீனம் வந்ததென்று விளங்காமல் திருதிருவென்று முழித்தேன். பின்னர்தான் விசயம் விளங்கியது. வெள்ளைப் பிரம்பு வைத்திருந்ததால் ஐயா கண் தெரியாதவர் என்பதால் வருத்தக்காரர்.

நான் விரும்பிய எதையும் வாங்கிக் கொள்ளவில்லை. விரும்பாத மனச்சுமையை நெஞ்சு நிறையச் சுமந்துகொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். ஒரு நாள் அல்ல, ஒவ் வொரு நாளும் வெவ்வேறு வடிவங்களில் வேதனைகளைக் கட்டிவிடுகிறவர்களுக்கு இந்தச் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தில் சொல்லும் செய்தி ஒன்றுண்டு.

"தயவு செய்து எங்களையும் மனிதர்களாக நினையுங்கள் சதை, இரத்தம், நரம்பு முதலியன எங்களுக்கும் இருக்கிறது. அதனால் எங்களுக்கும் உணர்ச்சிகள் உண்டு. நாங்களும் சமூகத்தில் நம்பிக்கையோடு வாழவே விரும்புகிறோம் எங்களுக்கு நீங்கள் பெரிதாக ஒன்றும் அள்ளித்தர வேண்டாம். வீதிகளிலே தடுமாறும் போது கைதந்து உதவுங்கள். எங்களையும் மனிதர்களாக நினையுங்கள். உங்களிடம் நாங்கள் பச்சாதாபத்தையோ, பரிதாபத்தையோ எதிர்பார்க்கவில்லை. மாறாக, மானிடத்தையும், மனிதநேயத்தையும், புரிந்து ணர்வையும்தான் எதிர்பார்க்கிறோம்" இன்றைய நாளில் நீங்கள் இந்த விழிப்புணர்வைப் பெறுவீர்களேயானால் இக்கட்டுரையின் செய்திகள் உங்களை வந்து சேர்ந்ததாக மகிழ்ச்சி அடைவேன். அந்த மகிழ்ச்சியோடு நிறைவு செய்கிறேன்.

# பழிப்பு நீங்கும்

## இன்று சர்வதேச வெண்பிரம்பு தினம்

□ □ □ □

# வவுனியாவில் போதைப்பொருள், மதுபாவனை சிறிலங்காப் பொலிசாரினால் ஊக்குவிப்பு

## பொது அமைப்புக்கள் கவலை

(செட்டிகுளம்)

வவுனியாவில் போதைப்பொருள் மற்றும் மதுபாவனை அதிகரிப்புக்கு சிறிலங்காப் பொலிசாரே முக்கிய காரணம் என பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அண்மைக்காலமாக போதைப் பொருள் பாவனையும், மதுபாவனையும் வவுனியாவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. சிறிலங்காப் பொலிசார் இவை அதிகரித்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை மிகவும் கவலை அளிப்பதாக வவுனியா பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

செட்டிகுளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது இலவசமாக பொலிசாரினால் மதுவழங்கப்பட்டிருந்தது. மது அருந்திய இளைஞர்குழு ஒன்றிற்கும் பொலிசாருக்குமிடையில் மோதலொன்றும் இடம்பெற்றிருந்தது. இதில் இளைஞர்கள் சிலர் காயமடைந்தனர். இவ்வாறான சூழல் மீண்டும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்படவேண்டும். இதேபோல் வவுனியாவில் கசிப்பு வடித்த நபர் ஒருவரைப் பிடித்து பொதுமக்கள் பொலிசாரிடம் ஒப்படைத்தபோதும் அவரைப் பொலிசார் அன்றையதினமே விடுவித்து விட்டனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் பொலிசாரின உதவியுடன் போதைப் பொருள், விற்பனை அதிகரித்துள்ளது என்றும் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய போதைப்பொருள் மதுபாவனை அதிகரிப்பால் வவுனியாவில் பல சமூக விரோத செயல்கள் பெருக வாய்ப்பேற்பட்டுள்ளதென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (21)

# தற்கொலை செய்வோரில் சிங்களவர் 90 வீதமானோர்!

## -ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை யுத்தத்தினால் பலியானவர்களைவிடத் தற்கொலை மூலம் பலியாகியுள்ளவர்கள் தொகை அதிகரித்துள்ளது.

இக்காலகட்டத்துக்குள் 65,000 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக இலங்கைக் குற்றங்கள் அதிகரிப்புத் தொடர்பாக அவதானிக்கும் சர்வதேச நிலையத்தின் தலைவர் ஹரிஸ்பத்துவே ஆரிய வங்சாலங்கார தேரர் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ள கூற்றின் படி, வடகிழக்கு யுத்தத்தில் பலியானவர்களைவிட மேற்படி எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார். தற்கொலை செய்துகொண்டோரில் சிங்களவரின் எண்ணிக்கை 90 வீதமாகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# 600 தாதியர் வெற்றிடங்களுக்கு பதின்னான்கு பேரே விண்ணப்பம்!

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 600 மருத்துவ தாதியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பத்திற்கமைய இதுவரை 14 பேரே விண்ணப்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களுக்கு 600 மருத்துவத் தாதிமார்கள் நிரப்பப்பட வேணடும் என்பதால், அரசு அதற்கான விண்ணப்பங்களை க.பொ.த.சாதாரண தரத்துடன் கோரியிருந்தது.

ஆனால் மருத்துவ தாதியர் சங்கமோ க.பொ.த.உயர்தரத்துடன் தான் மருத்துவ தாதியர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது இதனால் அரசு முன்னைய க.பொ.த.சாதாரணதர மருத்துவர் தாதியர் கோரலை ரத்துச் செய்து, க.பொ.த.உயர்தரத்துடன் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

ஆனால் இதுவரை 14 விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

திருகோணமலை மாவட்டத்திற்கு மட்டும் 115 மருத்துவ தாதியர்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

# சுகவீன விடுமுறைப் போராட்டம் நடத்த 65 ஆயிரம் ஆசிரியர்கள் தீர்மானம்

அரசாங்கம் தமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லையெனத் தெரிவித்து, சுமார் 65.ஆயிரம் ஆசிரியர்கள் எதிர்வரும் 21.ஆம் திகதி சுகவீன விடுமுறைப் போராட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக பலதடவைகள் கல்விமைச்சருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உறுதிமொழிகள் வழங்கப்பட்டாலும், இதுவரை எவ்வித ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தினாலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கத் தீர்மானித்ததாக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளை ஆசிரிய சேவையில் சீர்செய்தல், ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பொன்றை மேற்கொள்ளுதல், பதவியுயர்வுகளுடனான சம்பள நிலுவைகளை வழங்குதல், ஆசிரிய இடமாற்றங்களில் கிரமமான நடைமுறையைப் பின்பற்றுதல், அனைத்து அரசியல் நியமனங்களையும் ரத்துச் செய்தல் உட்பட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்த சுகவீன விடுமுறைப் போராட்டத்தை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நடத்தவிருக்கின்றன.

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிறிலங்கா இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

கண்டி நகரில் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் கண்டி வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவரின் வாகனக்கடத்தலில் சம்பந்தப்பட்டவர்களென விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக மத்திய மாகாண குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி டி.குணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் இராணுவத்தின் கமாண்டோ பிரிவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியுள்ளார். இந்த இராணுவச் சிப்பாய் இன்னும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருந்தது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# 28 வருடங்கள் பாராளுமன்றில் இருந்தும் பலன் கிடைக்கவில்லை

## -அநுரா பெரும் கவலை

(கொழும்பு)

28 வருடகாலமாக பாராளுமன்றத்தில் இருந்தேன். எதுவித பலனும் எனக்குக் கிடைக்கவில்லை என 9ஆம் திகதி காலியில் நடந்த பொதுக்கூட்டத்தில் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த கூட்டங்களுக்கு மக்கள் அதிகமாக சமுகமளிக்கவில்லை. இது எனக்கு மிகவும் கவலையாக உள்ளது.

ஜே.வி.பி. உயர்கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு, இன்னும் மூன்று அமைச்சுகள் கேட்டிருக்கின்றார்கள். அவைகளை கொடுப்பதில் எந்தத் தவறும் கிடையாது. பண்டாரநாயக்க குடும்பத்தினரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விரட்டி அடிக்க முடியாது. இந்தக் கதைகளில் எந்தப் பிரயோசனமும் கிடையாது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.மு. அரசாங்கத்தை பாதுகாத்து நிற்பது எது?

ஆட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் பொறுமை காத்து வந்தேன். ஆனால், இனியும் பொறுமை காக்க முடியாது என சனாதிபதி சந்திரிகா அடிக்கடி பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்தை எச்சரிப்பதும் மிரட்டுவதுமுண்டு. அதாவது ஆட்சி கவிழ்க்கப் படும் என எச்சரிக்கை விடுவதுண்டு. இந்தவகை யில் இறுதியாகத் திருமலைத்துறை முகத்திற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட் டுள்ளதாகக் கூறி இவ் எச்சரிக்கை விடுக்கப் பட்டது.

எவ்வளவு விரைவில் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைப்பது அன்றிக் கவிழ்ப் பது என்பது சாத்தியமாகுமோ அத்தனை விரைவில் அரசாங்கத்தைக் கலைத்துவிடுதல் என்பது சனாதிபதி சந்திரிகா உட்பட பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் குறிக் கோளாகும். ஆனால், ஐ.தே.முன்னணி அரசாங் கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சுமார் இரண்டு வருடங்கள் நெருங்கிவரும் நிலையிலும் அது இன்னமும் சாத்தியமாகவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் அரசாங்கம் ஒன்று அமைந்ததுமே சுமார் ஒருவருட காலம் 6 ரையிலேயே இவ்வர சாங்கம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.



திரக்கட்சியின் அடுத்த வேட்பாளராகத் தன் பெயர் அறிவிக்கப்பட வேண்டும் என்பது அவ ரின் நிலைப்பாடாகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா அரசாங் கத்தின் மீது அடிக்கடி குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்ற போதும் அவரால் அதற்கு எதிரான உறுதியான நடவடிக்கை இதுவரை அவரால் எடுக்கப்படவில்லை. ஆனால், இவ் வாறு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்ப தற்குக் காரணம் அரசாங்கத்தின் நடவடிக் கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதோ அன்றி அரசாங்கத்தின்பால் உள்ள நல்லபி மானத்தினாலோ அல்ல. ஆட்சிக் கவிழ்ப்பிற்கு ஏற்ற சூழ்நிலை அதாவது சனாதிபதி சந்தி ரிகாவிற்கு ஏற்ற சூழ்நிலை வரவில்லை என் பதே யதார்த்தமாகும். அதாவது இன்றோ அன்றி இதுவரையிலோ ஐ.தே.முன் னணி அரசாங் கத்தைக் கலைப் பதற்கான வாய்ப்பு/ பொருத்தமான சூழ்நிலை கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து ஆட்சிக் கவிழ்ப்பை ஏதோ ஒரு காரணியைக் கொண்டு மேற்கொண்டு விடலாம். ஆனால், அவரைப் பொறுத்து ஆட்சிக் கவிழ்ப்பு மேற் கொள்ளப்படும் அதே வேளை புதிய அரசாங் கத்தைப் பொ.ஐ.முன்னணி அமைத்துக் கொள்ளு தல் வேண்டும். ஆனால், இது இன்றைய அரசியற் சூழ்நிலையில் எத்தனை தூரம் சாத்தியப்பாடாகும் என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில், தற்போதைய சூழ்நிலையில் பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைக்கும் அதி காரத்தைப் பெறுதல் என்பது சாத்தியமற்ற தொன்று. ஆட்சிக்கவிழ்ப்பிற்கும், புதிய அர சாங்கம் அமைப்பதற்கும் ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரசின் சகல பிரிவுகளும் ஒத்துழைப்பு வழங்கினும், பொ.ஐ.முன்னணி புதிய அரசாங் கத்தை அமைப்பதற்கான பெரும்பான் மையைப் பெறுதல் என்பது சாத்தியமாகக் கூடிய நிலையில் இல்லை.

ஆகையினால், ஆட்சிக் கவிழ்ப்பினால் பயன் ஏதும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. மாறாக ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்வ தாயினும் ஆட்சியைக் கைப்பற்றும் அளவில் பொ.ஐ. முன்னணி தேர்தலில் வெற்றியீட்டுமா என்பதும்

அவ்வாறு முடியாமல் போயுள்ளமைக்குக் காரணம், இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளே ஆகும். அதாவது சமா தானப் பேச்சுவார்த் தைகள் நீடிக்கும் வரை யில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கவிழ்த்தல் என்பது சாத்தியப்பாடான தொன் றாக இருக்க முடியாது. அதாவது தமிழர் தேசியக் கூட்ட மைப்பின் ஆதரவு அரசாங் கத்திற்கு இருக்கும் வரையில், சனாதிபதி சந்திரிகா ஆட்சிக் கவிழ்ப்பை மேற் கொள் வதில் பயன் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

அதாவது ரணில் விக்கிரம சிங்க அர சாங்கத்தின் பாதுகாப்பு என்பது தமிழ் தேசி யக் கூட்டமைப்பின் தீர்மானத்தின் அடிப் படையிலானதாகவே இருக்க முடியும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்திற்கு எதி ராகச் செயற் படத் தீர்மானம் மேற்கொள்ளுமா னால் ஐ.தே.முன்னணி அரசாங்கத் திற்கு எதிரான நடவடிக்கைகளில் சனாதிபதியால் வெற்றிபெற்றுவிட முடியும்.

ஆகையினால் இன்று ஐ.தே.முன் னணி அரசாங்கத்தின் பலமே சமா தானப் பேச்சு வார்த்தைகளே ஆகும். ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த் தைகள் தொடரும் பட்சத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவானது பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவிற்கு இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற் றாலோ அன்றி முறிக்கப்பட்டால் கூட, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை அரசாங்கம் இழக்க வேண்டியதாகிவிடும்.

இன்று ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு எதிராகப் பெரும் போராட்டங்களை நடத்து வதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. கொழும்பில் இலட்சக்கணக்கான தனது ஆதரவைத் திரட் டித் தமது பலத்தை கூட்டப்போவதாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

மறுபுறத்தில் வேலை நிறுத்தங் கள், உண்ணாவிரதங்கள் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் எதிர்க்கட்சிகள் முற்பட்டு நிற்கின்றன. இதனால், அரசாங்கம் தொடர்ச் சியாக நெருக்கடிக்கு முகம் கொடுத்தும் வரு கின்றது. ஆனால், அவ்வாறு இருந்தும்

கவின் அரசாங்கம் தாக்குப் பிடித்து நிற்ப தற்குக் காரணம் சமாதானப் பேச்சுவார்த்தை களே ஆகும். அதாவது சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுவதனால் தமிழர் தரப்பு ஆதரவும்,சர்வதேச ஆதரவும் உறுதி யாக உள்ளது.

இந்தவகையில் பார்க்கையில் ரணில் அரசாங்கத்தின் எதிர்காலமே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. இடைக்கால நிர்வாக சபை,அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட விதத் திலான இனப்பிரச்சினைக்குரிய தீர்வு நடவ டிக்கைகள் என்பன பற்றி அரசாங்கம் கவலை கொள்வது அர்த்தம் உரியதொன்றல்ல.

ஏனெனில், எத்தகைய எதிர்ப்புக் கிளம் பினும்,தமிழர் விடுதலைக் கூட்டமைப்புப் போன்றவற்றின் ஆதரவு இருக்கும் வரை ஆட்சிக் கவிழ்ப்போ, கலைப்போ இவற்றால் எதிர்க்கட்சிகள் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலாபம் ஈட்டிவிட முடியாது. ஆகையினால், சனாதிபதியும்சரி, அவரது கட்சியும் சரி ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றி விடுக்கும் எச்சரிக்கைகளால் பயன் ஏதும் இல்லை.

அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்திலோ- அப்பாற்பட்ட விதத்திலோ எதுவாக இருப் பினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன் னேற்றம் காணும் வரையில் சனாதிபதி சந்தி ரிகாவால் ரணில் விக்கிரமசிங்க அரசாங் கத்தைக் கலைத்துவிடுதல் இலகுவான தொன்றாகவோ, பயனுள்ள தொன்றாகவோ இருக்கமாட்டாது.

ஆகையினால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் இன்றைய பலமே சமாதானப் பேச்சுவார்த்தைகளிலேயே உள்ளது. இப் பேச்சுவார்த்தைகள் இதுவரையில் ஆட்சிக் கவிழ்ப் பில் இருந்தும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரும் சீரழிவில் இருந்தும் காப்பாற்றியுள்



ஏனெனில், புதிய அரசாங்கம் ஒன்று அமைக் கப்பட்டால் ஓராண்டு காலத்திற்குள் அரசியல் யாப்பின் பிரகாரம் அதனைக் கலைப்பதற்கு சனதிபதிக்கு அதிகாரம் இல்லை.

இந்நிலையில் ஓராண்டு கழிந்தும் இன் னமும் சனாதிபதி சந்திரிகா தொடர்ச்சியான எச்சரிக்கையை விடுத்து வந்துள்ளாரே ஒழிய அரசாங்கத்தை அச்சுறுத்தும் வகையில் நடவடிக்கை எதையுமே மேற்கொள்ளவில்லை. இதனால் சனதிபதியை நம்பியிருந்த சிலர் ஏமாற்றமும் அடைந்துள்ளனர். ஒருவகையில் சனாதிபதி மீது சீற்றமும் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவின் சகோதரன் அநுராபண்டாரநாயக்க பெரும் சீற்றம் கொண்டுள்ளார். அவர் உடனடியாக ஜே.வி.பியின்-உதவியுடன் உடன்பாடு -செய்துகொண்டு-ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றைச் செய்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைத் துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறார். வெளிப்படையாக வற்புறுத்தியும் வருகின்றார்.


அவ்வாறு தான் இல்லாது தனது பதவிக்காலம் முடிவடைய சனாதிபதி தேர்த லைச் சுதந்திரக்கட்சி எதிர்கொள்ளும் என சனதிபதி சந்திரிகா தீர்மானம் எடுத்திருப்பின், சுதந்திரக்கட்சியின் அடுத்த சனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார்? என அறிவிப்புச் செய்ய வேண்டும் என்பது அநுராபண்டார நாயக்கவின் எதிர்பார்ப்பாகும். அதாவது, சுதந்

கேள்விக்குரியதே. அதாவது, தேர்தலில் பொ.ஐ.முன்னணி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்பது சனாதிபதி சந்திரி காவிற்கு நன்கே தெரியும்.

இந்நிலையில் தான், ஆட்சிக் கவிழ்ப்புக் குறித்த கனவுகள் இருப் பினும் ஆட்சிக் கவிழ்ப்பொன்றை மேற்கொள்ளமுடியாததொரு கையறுநிலையில் சனாதிபதி சந்திரிகா வுள்ளார். இதன் விளைவே அடிக்கடி எச்சரிக் கைகளாகவரினும் நடைமுறையில் ஆட்சிக் கவிழ்ப்பு என்பது இடம்பெறாது உள்ளது.

ஆனால், அதற்காக சனாதிபதி சந்திரிகா ஆட்சிக் கவிழ்ப்புக் குறித்துச் சிந்திக்கவோ அன்றி அதற்கான முயற்சிகளைச் மேற்கொள் ளாமலோ இல்லை. அத்தோடு தனது பதவிக் காலம் முடிவடைவதற்குள் சனாதிபதி ஆட்சிக் கவிழ்ப்பை நிச்சயமாக மேற்கொள்வார் என்றே எதிர்பார்க்கலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங் கத்தின் நடவடிக்கைகள், அரசியல் யாப்பிற்கு முரணானவை எனவும் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிப்பன எனவும் சனாதிபதி சந்திரிகா அடிக்கடி கூறிக்கொள்வதுண்டு. ஆனால், இவை இரண்டும் ஒன்றாகவோ அன் றித் தனித்தனியாகவோ ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் போதுமான காரணிகளாகும்.ஆயினும் சனா திபதி சந்திரிகாவால் ஆட்சிக் கவிழ்ப்புப் பற் றிச் சிந்திக்க முடியாது.



ஆட்சிக் கவிழ்ப்பு என்பது இன்னமும் சாத்திய மற்ற தொன்றாகவே உள்ளது.

இந்தவகையில், எதிர்க்கட்சி கள் கொடுக் கும் நெருக்கடிகள் அதிகமாக இருக்கின்ற போதும், இன்னமும் ரணில் விக்கிரமசிங்

ளது. இந்நிலையில் ரணில் அரசாங்கத்தின் எதிர்காலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என்பதும் மிகையாகாது.

**பொ. ஜெயராஜ்**


தமிழீழ வைப்பகம்

உந்தூர்தி ஏல விற்பனை

22-10-2003

தமிழீழ வைப்பகத்தின் பாவனையிலிருந்த ஐந்து (05) HONDA MD-90 இன உந்தூர்திகள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. உந்தூர்திகளைப் பார்வையிட விரும்புவோர் 2003-10-15 ஆம் நாள் தொடக்கம் 2003-10-21ஆம் நாள் வரை கிளிநொச்சி கரடிப்போக்கு இல: 63 இல் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் பணி நேரத்தில் பார்வையிடலாம்.

ஏல விற்பனை 2003-10-22ஆம் நாள் நண்பகல் 12.00 மணிக்கு தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் நடைபெறும்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-8455)


பத்திரிகையாளர் மீதான தாக்குதல் குறித்து

## யாழ். ம.உ.ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-மாம்பழம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ வாகனம்- ஆட்டோ விபத்தையடுத்து அப்பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் மீது இராணு வத்தினர் தாக்குதல் நடத்தியது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தியுள்ளனர்.

இராணுவத்தின் தாக்குதலால் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள பத்தி ரிகையாளரை வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப் பதிகாரி ருவான் சந்திரசேகர மற்றும் சுபேந்திரன் ஆகியோரே விசாரணை நடத்தினர்.

அங்கு இடம்பெற்ற சம்பவம் குறித்து கேட்டறிந்த அதிகாரிகள் பத்திரிகையாளரிடமிருந்து இரா ணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்ட பொருட்கள் பற்றியும் அவற்றின் பெறுமதி பற்றியும் கேட்டறிந் துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது ஆறு யாழ். ஊடகவியலாளர்கள் தாக்கப்பட் டமை தெரிந்ததே. (33)

# வேலைக்கமர்த்தப்பட்ட சிறுவன் ம.உ.ஆணைக்குழுவில் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பைச் சேர்ந்த சிறுவனை மீட்க வருமாறு வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவினர் சிறுவனின் பெற்றோரைக் கேட்டுள்ளனர்.

மட்டு-முனைத்தீவுப் பகுதியினைச் சேர்ந்த 12 வயதான சித்திரசேகரன் திவாகர் என்ற சிறுவனை இவரது மாமனார் கொழும்பு செட்டித் தெருவிலுள்ள நகைக்கடையில் வேலைக்குக் கூட்டிச் சென்றிருந்தார். வேலைத்தளத்தில் மாமனாரினால் தண்டிக்கப்பட்ட சிறுவன் கடையிலிருந்து தப்பிச்சென்று வழிப்போக்கரின் உதவியுடன் மன்னார் சென்று பொதுமகன் ஒருவரால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரது உடம்பில் அடி காயத் தழும்புகள் காணப்படுவதாகவும் இச்சிறுவனை பெற்றோர் வந்து பொறுப்பெடுக்கும்வரை வவுனியாவிலுள்ள சிறுவர் நிலையம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளார். சிறுவனின் பெற்றோருக்கு கண்காணிப்புக்குழு ஊடாக தகவல் அனுப்பபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## - மாம்பழம் சந்தி விபத்து -

# கைது செய்யப்பட்ட 8 பேரை பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

அரியாலை மாம்பழம் சந்தியில் நடைபெற்ற வாகன விபத்தின் பின் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பத்துப் பேரில் 8 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறும் பொலிஸ் சம்பவம் தொடர்பான முழு விபரங்களையும் கையளிக்குமாறும் யாழ் நீதவான் விக்னராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ராணுவ வாகனம் ஒன்றும் முச்சக்கரவண்டியும் விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவத்தில் ஆட்டோ சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் காயமடைந்தனர். இது தொடர்பாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தவர்களில் இருவர் அடி காயங்களுக்கு சிகிச்சை பெறும் பொருட்டு யாழ். பொலிசாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவ்விரு இளைஞர்களையும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பொலிசாருக்கு யாழ் மாவட்ட நீதவான் விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (27)


## ஜெயபுரம் அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்மாள் ஆலயம்

கேதாரகௌரி விரதபூஜை ஆரம்பமாகி 21 நாட்களும் சிவ ஸ்ரீஇரவணமடி நா. சிதம்பரேஸ்வரக் குருக்கள் தலைமையில் விசேட பூஜை நடைபெறுகிறது. காப்புகட்டும் வைபவம் 25.10.2003 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கேதாரகௌரி விரதவைபவம் நடைபெறவிருப்பதால் அடியார்கள் அனைவரும் நாகபூசணி அம்மனின் அருளைப் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

(3849)

இவ்வண்ணம்
ஆலயபரிபாலன சபையினர்.



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 30 | 15 |
| 08 | 10 |
| 1979 | 2000 |

### லெப்டினன்ட் மாறன்
### இரத்தினராசா செல்வகுமார்

(835, கல்விளான் வீதி, துணுக்காய்)

போர் ஓய்ந்து பார்மிளிர்ந்து எழுகையில்
எம் தாய் பெற்ற மைந்தனே நீ எங்கே!
மூவாண்டு காலங்கள் போன பின்பும்
செல்வா உன் நினைவுகள் நான் மறந்திடுமோ!
என்மடிமீது நீ ...
எம் மனை ...
மகனே ... எங்கு போனாய்?

பிரிவால் துயருறும்:-
தாயார், சகோதரர்கள்,
அண்ணிமார், சகோதரிகள்,
பெறாமக்கள், போராளிகள்,
நண்பர்கள்.

இரா.சிவகுமார்,
23/2தொட்டியடி,
விசுவமடு.

(3840)


# புலிகளுடனான சமாதான முயற்சிகளை சிறிலங்கா அரசால் மட்டும் நடத்த முடியாது

## - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து

(லண்டன்)

விடுதலைப்புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளை சிறிலங்கா தனியாக நடத்த முடியாது என கொழும்பில் பிராந்திய மாநாடு ஒன்றில் உரையாற்றும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இலங்கை சமாதான முயற்சிகளில் வெளிநாடுகள் சம்பந்தப்படுவதால் நாட்டின் இறைமை தொடர்பில் சமரசம் செய்ய நேரிடலாம் என்ற எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டை பிரதமர் நிராகரித்தார்.

வடக்கு கிழக்கில் அதிகாரப் பகிர்வு அரசாங்கம் ஒன்று தொடர்பான தமது பிரேரணைகளை விடுதலைப்புலிகள் முடிவு செய்யும் சூழ்நிலை யில் பிரதமரின் இக்கூற்று வெளிப்பட்டுள்ளது. முக்கியமானதென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.


## துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய்

### களஞ்சிய முகாமையாளர் பயிலுனர் ஆட்சேர்ப்பு

முல்லைத்தீவு மேற்குப் பிரிவில் 10 வருடங்களுக்கு மேலாக நிரந்தரமாக வசிக்கும் 18-45 வயதிற்கு இடைப்பட்ட ஆண் பாலாரிடமிருந்து களஞ்சிய முகாமையாளர் பயிலுனர்களாக நாளொன்றுக்கு 100/- விற்கு மேற்படாதபடி சம்பளம் வழங்கக்கூடியதாக தற்காலிக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை சுயமாகத் தயாரித்து 28.10.2003ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பிந்தாமல் கிடைக்க கூடியதாக தலைவர், துணுக்காய் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பதவி :-** களஞ்சிய முகாமையாளர் (பயிலுனர் தற்காலிகம்)

**குறியீட்டு இலக்கம்:-** 208/14

**கல்வித்தகைமை:-**

க.பொ.த.சாதாரன தரத்தில் இரு அமர்விற்கு மேற்படாமல் கணிதம், தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப்பயிற்சி நெறியில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தலைவர்,
துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம்,
துணுக்காய்.

(சி-8650)



## பணிநிலை வெற்றிடம்

"மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட (MOUVAL GROUP (PVT) LTD) நிறுவனத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

**01. பணிநிலை:-** இயந்திரவியல் முகாரி (MECHANICAL FORE-MAN)

**தகைமை:-** அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் (MOTOR MECHANISM) கற்கை நெறியைக் கற்றுத் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

**பட்டறிவு:-** 03 ஆண்டுகள் இயந்திரவியல் முகாரி (MECHANICAL FOREMAN) பட்டறிவு உட்பட 10 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை இயந்திரவியல் (MECHANISM) துறையில் பெற்றிருக்க வேண்டும்.

**அகவை:-** 50 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**02. பணிநிலை:-** உற்பத்தி முகாமையாளர்

**தகைமை:-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் நிர்வாகமாணி (முகாமைத்துவம்) கற்கை நெறியை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**பட்டறிவு:-** 03 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை உற்பத்தித் துறையில் பெற்றிருக்க வேண்டும்.

**அகவை:-** 35 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேண்டுகையாளர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட தன்விளக்கத் [சுயவிபரம்] துடனும், தேவையான சான்றிதழ்களுடனும், இரண்டு [02] நற்சான்றிதழ்களுடனும் வரும் 2003 ஒக்டோபர் 25 ஆம் நாள் பணிநிலை 01 இற்கு உரியவர்கள் காலை 10.00 மணிக்கும், பணிநிலை 02 இற்கு உரியவர்கள் மதியம் 2.00 மணிக்கும் கந்தசாமி கோவிலடி, யாழ்.சாலை, கிளிநொச்சியில் அமைந்திருக்கும் "மௌவல் குழுமம்" [தனியார்] வரையறுக்கப்பட்ட (MOUVAL GROUP (PVT) LTD) நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

முகாமைப் பணிப்பாளர்,
மௌவல் குழுமம் (தனியார்) வரையறுக்கப்பட்டது.
கிளிநொச்சி.

(சி-8651)



**சிந்தனைக்கு**

நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-10-2003

## மற்றொரு குறிகாட்டி!

பொலிஸ்மா அதிபர் ஈ.ரி ஆனந்தராஜாவிற்கு சனாதிபதி சந்திரிகா சேவைக்காலநீடிப்பு வழங்காத நிலையில்- நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அரசாங்கம் ஈ.ரி ஆனந்தராஜாவின் சேவைக்காலத்தை நீடிப்புச் செய்யுமாறு கோரியிருந்த போதும் சனாதிபதி அதனை வழங்காது போனமை சனாதிபதி சந்திரிகாவின் இனவாத செயற்பாட்டிற்கான வெளிப்படையானதொரு குறிகாட்டியாகவே கொள்ளத்தக்கது.

கடந்த வாரத்தில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பில் குறிப்பாக இராணுவத்தில் பல சேவைக்கால நீடிப்புக்கள் சனாதிபதி சந்திரிகாவால் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக இராணுவத்தளபதி லெப். ஜெனரல் பலகல்லவிற்கு சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டதோடு புதிய பொறுப்புக்களும் அளிக்கப்பட்டன.

இராணுவத்தளபதிக்கு வழங்கப்பட்ட இச்சேவைக்கால நீடிப்பு மூன்றாவது தடவையாகும். பல இராணுவ உயர் அதிகாரிகள் பதவி உயர்வு பெறாது சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருந்தும் கூட லெப்.ஜெனரல் பலகல்லவிற்கு சனாதிபதி பதவி உயர்வு வழங்கப்பட்டமை பலருக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளிக்கத்தக்கதாகவே இருந்தது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா பதவி உயர்வுகள் சேவைக்கால நீடிப்புக்களை தனது விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப வழங்குவதென்பது புதியதொன்றல்ல. ஏற்கனவே அவர் கடற்படைத் தளபதி வைஸ்.அட்மிரல் தயா சந்தகிரிக்கு வழக்கத்திற்கு மாறாக ஒரே தடவையில் மூன்று ஆண்டுகளுக்குப் பதவிக்கால நீடிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமனம் பெற்ற பிரதம நீதியரசரான சரித் டி சில்வா பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளவர். அவர் பெயரில் வழக்குகள் கூடப் பதிவு செய்யப்பட்டன. அவ்வாறு இருந்தும் சனாதிபதி சந்திரிகா அவரை நியமனம் செய்துள்ளது மட்டுமல்ல, அவருடன் நெருக்கமான உறவைக் கொண்டவராக உள்ளார்.

இவ்வாறாக வழமைக்கு மாறான வகையிலும், பொருத்தப்பாடற்ற வகையிலும் பதவிகளையும், சேவைக்கால நீடிப்புக் களையும் வழங்கியுள்ள சனாதிபதி சந்திரிகா ஈ.ரி. ஆனந்தராஜாவிற்கு ஓராண்டு கூட சேவைக்கால நீடிப்பு வழங்காமை அவர் தமிழர் என்பதைத்தவிர வேறு எதுவும் காரணியாக இருக்க முடியாது. அதிலும்கூட ஓராண்டு சேவைக்கால நீடிப்பு வழங்கப்படுதல் வழமையானதென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

திரு.ஆனந்தராஜாவிற்குப் பொலிஸ்மா அதிபர் பதவி வழங்கப்பட்ட போதே பேரினவாத சக்திகள் குறிப்பாக சிஹல உறுமய போன்ற கட்சிகளும், ஜே.வி.பி போன்றவையும் எதிர்ப்புத் தெரிவித்தே இருந்தன. ஆயினும் தவிர்க்கமுடியாத நிலையில் இந்நியமனம் வழங்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

ஆனால், தற்பொழுது போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட கோடீஸ்வரன் ஒருவருடன் ஆனந்தராஜாவிற்குத் தொடர்புகள் இருப்பதாகப் பேரினவாத ஊடகங்களும், அரசியற் கட்சிகளும் எழுப்பிய சர்ச்சையானது அவருக்குச் சேவைக்கால நீடிப்பு வழங்காதுவிட்டமைக்குக் காரணம் கற்பிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழர் ஒருவருக்கு இதுபோன்று நிகழ்வது எதிர்பார்க்க முடியாதவை அல்ல. தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டதே இத்தகைய நிலமைகள் காரணமாகவே. அதாவது தமிழர்கள் உயர் பதவிகளை எட்டுவதைத் தடை செய்யும் நோக்கத்திலானதே ஆகும். அன்று தமிழர்களின் உயர்வைத் தடுத்து நிறுத்தத் தந்தை சட்டம் கொண்டு வந்தார் எனின், இன்று மகள் இவ்வாறு நடந்துகொள்வது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

ஆனால், இனவாத ஆட்சியாளர்கள் இவ்வாறு நடந்து செல்கின்ற போதும், இன்னமும் எச்ச சொச்சமாகவுள்ள தமிழ் அதிகாரிகள் சிங்கள அரசிற்கும், ஆட்சியாளர்களுக்கும் இன்னமும் விசுவாசமாக நடந்து கொள்கின்றமையானது அவர்களின் கடமை உணர்வைக் காட்டுகின்றதா? அன்றி அவர்களின் விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றதா? என்பதை விளங்கிக்கொள்வது கடினமாகவே உள்ளது. ஆனால் இது பொலிஸ்மா அதிபர் ஈ.ரி.ஆனந்தராஜாவிற்கு மட்டும் பொருத்தப்பாடானதல்ல. அனைத்துத் தமிழருக்குமே பொருந்தப்பாடானதாகும். இது மட்டுமல்ல, இத்தகைய நிகழ்வு தனியாக அதிகாரிகளுக்கு மட்டுமல்ல அரசியல்வாதிகளுக்கும் கூடப் பொருத்தப்பாடானதே.

# ஜே.வி.பி.யுடன் அதிகாரத்தைப் பகிர சனாதிபதியும் படியிறங்கிவந்துள்ளார்

## - புதிய இடதுசாரி முன்னணித் தலைவர்

(கொழும்பு)

"சிறு இருமல் ஏற்பட்டாலும் அமெரிக்காவுக்கு ஓடிவிடும் அனுரா போன்றோரிடம் அதிகாரத்தை வழங்க எமக்கு அவசியம் கிடையாது" இவ்வாறு புதிய இடசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

"இடது சாரிகள் செய்ய வேண்டியது என்ன" என்ற தலைப்பில் அனுராதபுரத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துக் கூறும் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பிக்கு அதிகாரத்தை பகிர்ந்து அளிக்கும் நிலையிலிருக்கின்றது. பிரதமர் பதவியை வழங்கியாகிலும் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்துக் கொள்ள அனுரா பண்டாரநாயக்க முயற்சிப்பதாகவும் முதலில் எதிர்ப்பு தெரிவித்த சந்திரிகா தற்போது அனுரா மூலம் மீண்டும் கை கோர்க்க நினைப்பதாகவும் தெரிவித்துள்ளார். இன்று எமது கட்சியின் யோசனைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஊடுருவியிருக்கின்றன சுகாதாரசேவை, புகையிரத சேவை ஆகியவற்றின் வேலை நிறுத்தம் என்பன தமது நடவடிக்கை என ஜே.வி.பி. கூறினாலும் அது அவர்களின் நடவடிக் கையல்ல இந்நாட்டின் இடது சாரி சக்திகளின் ஐக்கியம் என்றார்.

ஜே.வி.பி. தலதா மாளிகையை வணங்கி பாதயாத்திரையை மேற்கொண்டது. ஐ.தே.கவின் தூணாகிய குணவன்சவும் யாத்திரையில் இருந்தார். தேசப்பற்றாளர் பேரணி என்று கூறப்பட்டாலும் இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மதத்தவர்களைப் புறக்கணித்து விட்டே பேரணி நடத்தப்பட்டது.எனவே எவ்வாறேனும் அது தேசப்பற்றாளர் யாத்திரை எனக் கூறமுடியாது.

இனவாதத்தை தூண்டும் இயக்கத்தை ஆரம்பித்து நாட்டின் இனவாதத்தை தூண்டுவது ஜே.வி.பி யினரே. வியட்நாம், கியூபா, அமெரிக்கா பற்றி பேசும் அவர்கள் இந்நாட்டிலொழும் தமிழர் பற்றி வாய் திறக்காததன் ரகசியம் யாது?

எமது இராணுவம் இந்நாட்டுக்குத் தேவையில்லை வெளிநாட்டு இராணுவத்தை வரவழைத்து புலிகளை அடக்கி நாட்டை ஏகாதிபத்திய வாதிகளிடம் கொடுக்கவே ஐ.தே.க. நினைக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டமூலத்தில் மாற்றம் கொண்டுவருவதையிட்டு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவில்லை

## - சனாதிபதிக்கு கடிதமூலம் முறைப்பாடு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் மோசடி தடுப்புச் சட்ட மூலத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக அரசு எடுத்துள்ள தீர்மானம் பற்றி தமக்கு இது வரை அறிவிக்கவில்லையென லஞ்ச ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு சனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இவ்வாறான சுதந்திர ஆணைக்குழுவில் திருத்தம் கொண்டு வருவது குறித்து சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவிற்கும், அரசியல் சக்திகளுக்கும், பாராளுமன்றத் திற்கும் அதுபற்றி அறிவிக்க வேண்டுமென சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தேச திருத்தச் சட்டம் தொடர்பாக சனாதிபதி யிடமிருந்தும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படவில்லையென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் உத்தேச திருத்தச் சட்டமூலம் தொடர்பான ஆலோசனைகளை லஞ்ச ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு சனாதிபதிக்கான கடிதத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் பொலிசார் திடீர் சோதனை குற்றச்செயல்களில் ஈடுபட்ட பலர் கைது!

புத்தளம் பொலிசார் கடந்த சனிக்கிழமை இரவு மேற்கொண்ட திடீர் தேடுதல் சோதனை நடவடிக்கை யொன்றில் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட பலரைக் கைது செய்துள்ளதுடன் ஆயுதங்கள், வாகனங்கள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளார்கள்.

இந்தத் திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது வெளி நாடொன்றிலிருந்து படகு மூலம் சட்ட விரோதமான முறையில் எடுத்து வரப்பட்டிருந்த பெரும் தொகையான சிகரெட்டுக்களும் துப்பாக்கி ஒன்றும், ரம்போ கத்திவாள்கள் உட்பட பல சட்ட விரோத ஆயுதங்களும், இரண்டு ஆட்டோக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த மூன்று பேர், இராணுவத்திலிருந்து தப்பி வந்த ஒருவர் உட்பட ஆட்டோக்களில் ஆயுதங்களுடன் வந்த சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி ரத்னா யக்க கூறியுள்ளார்.

புத்தளம் நகரம் உட்பட நகரத்தையண்டிய பகுதிகளிலேயே இந்தத் தேடுதல்சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

# பிரஜாவுரிமை சட்ட மூலத்தின் ஊடாக தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது

## -சிஹல உறுமய குற்றச்சாட்டு

இலங்கையில் பிரஜாவுரிமையற்று வாழுகின்ற இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்ட மூலத்தின் மூலம் இந்த நாட்டில் வாழுகின்ற தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது என சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

இதனால் ஊவாமாகாணத்தில் 18 சதவீதமும் ,மத்திய மாகாணத்தில் 25 சதவீதமும், நுவரெலியா மாவட்டத்தில் 57 சதவீதமும், பதுளை மாவட்டத்தில் 23 சதவீதமும், கொழும்பு கண்டியில் 12 சதவீதமும் தமிழர்களின் தொகை அதிகரித் துள்ளது.

இந்தச் சட்ட மூலத்தின் மூலம் தொண்டமானும், சந்திரசேகரனும் பிரபாகரனின் தனி நாட்டிற்கு உதவியுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

1986 இல் முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இது தொடர்பான சட்ட மூலத்தை அன்று கொண்டு வந்த போது அதனை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் எதிர்த்தன. ஆனால் இன்று அவை அதற்கு ஆதரவு அளித்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

# டெஸ்ட் சமநிலை முடிவிற்கு மோசமான களமே காரணம்

## - இந்திய கப்டன் கங்குலி

நியூசிலாந்திற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி சம நிலையில் நிறைவடைந்தமைக்கு மோசமான ஆடுகளமே காரணம் என இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

தமது பந்து வீச்சாளர்கள் மிகச்சிறப்பாகவே தங்கள் கடமைகளைச் செய்தனர். ஆனால் மோசமான ஆடுகளம் வெற்றியைப்பறித்துவிட்டது. எனக்கூறிய கங்குலி பாலாஜியை வெகுவாகப் பாராட்டினார் பாலாஜிக்கு இது தான் முதல்போட்டி என்ற டென்ஷனே இல்லாமல் நேர்த்தியாகப் பந்து வீசினார்.ஆடுகளம் ஒத்துழைக்காத போதும் அவரது பந்து வீச்சு சிறப்பாகவே இருந்தது என்று மனம் திறந்து பாராட்டினார்.

இதேவேளை, நாளை மொஹாலியில் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அஜித் அகாக்கர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.




# சாதனைகள் முறியடிக்கப்படுவதற்கே

## பிறைன் லாறா கருத்து

சாதனைகள் முறியடிக்கப்படுவதற்காகவே என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாறா தெரிவித்துள்ளார்.

தன்னுடைய 375 ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடித்த ஹைடனுக்கு தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்ட லாறா சாதனைகள் என்பவை முறியடிக்கப்படுபவை என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்படி சாதனையைப் படைப்பவர்கள் என்று எனக்கென ஒரு தனிப்பட்டியலை நான் வைத்திருந்தேன். இதில், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் எங்கள் அணியின் கிறிஸ் கெய்ல் போன்றோரை நினைத்திருந்தேன். அந்த வரிசையில் நான் ஹைடனை நினைத்திருக்க வில்லை என்றும், ஹைடன் ஏற்படுத்திய இச்சாதனையை இளம் வீரர்கள் யாராவது ஒருவர் முறியடிப்பதைப் பார்க்க விரும்புகின்றேன் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிளி. நகரத் திட்டமிடலுக்கு மாறான கட்டடங்கள் அகற்ற நடவடிக்கை

## கிளி. அரச அதிபர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தினைத் திட்டமிட்ட வகையில் நவீன நகரமாகக் கட்டியெழுப்பும் வகையில் சகலரது ஒத்துழைப்புடனும் கிளி/மாவட்ட நகரத் திட்டமிடல் குழுநடவடிக்கையெடுத்து வருகின்றது. இந்நகரத் திட்டமிடல் தொடர்பில்கட்டடங்களது. வரைபடங்களைச் சமர்ப்பித்து நகரத திட்டமிடலுக்கேற்ப அனுமதித்த கட்டடங்களையும், வீதிகளையும் கட்டுமாறும், பேணுமாறும் கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர், செயலாளர் ஆகியோர் கடந்த மூன்று வருடங்களாகப் பகிரங்க அறிவித்தல் மூலம் கோரியபோதும் ஒருசில பொது மக்களும், நிறுவனங்களும் இந்த வேண்டுகோள்களைச் செவிமடுக்காது தாங்கள் நினைத்ததுபோல் கட்டடங்களைக் கட்டி வருவதனை நகரத் திட்ட அபிவிருத்திக்குழு அவதானித்துள்ளது. இது தொடர்பில் அவ்வாறான கட்டடங்களை அகற்றுவதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என கிளி. அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கரைச்சி பிரதேச சபை, உட்பட அனைத்து கிளிநொச்சி மாவட்ட பிரதேச சபைகளதும் எழுத்துமூல அனுமதிபெறாது அமைக்கப்படும் கட்டடங்களுக்கும் எந்தவிதநட்டஈடும் கோரமுடியாது என்பதுடன் இவை அகற்றப்படும். ஆகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கமுன்பு கட்டடஉரிமையாளர்கள் தாங்களாகவே சட்டப்படியான வரையறைக்குள் கட்டடங்களைத் திருத்திக்கட்டி பிரதேசசபைகளின் அனுமதியைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், பெருமளவு பொது மக்களும், நிறுவனங்களும் அரச ஒதுக்கீடான புகைவண்டிப் பாதைகள், மைதானங்கள், தெருவோர ஒதுக்கீடுகள், வாய்க்கால்களின் ஒதுக்கீடுகள், அரச நிறுவனங்களுக்கான ஒதுக்கீடுகள் போன்ற வற்றைப்பிடித்து ஆட்சிசெய்து, கட்டடங்களையும் நிர்மாணித்து நிரந்தரப் பயிர்களையும் சட்ட விரோதமாக நாட்டியும் வருகின்றனர். இவ்வாறான காணிகளில் இருந்து சகலரும் உடனடியாக வெளியேற வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்துடன் அரசினால் நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட காணிகளை பலர் உறுதி எழுதி விற்றுவரும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. காணிச் சட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளுக்கு பெற்ற காணிகளை இரத்த உறவினருக்குக் கொடுக்காதுவேறுநபருக்கு பணத்துக்கு விற்றுவரும் நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் காணிகளை விலைக்கு வாங்குவோருக்கு மாற்றிக் கொடுக்க எந்தச் சட்ட ஏற்பாடும் இல்லை. மேற்படி விடயம் தொடர்பில் இது 'இறுதி அறிவித்தலாகும். எனவே நகர அபிவிருத்தித் திட்டத்திற்கிணங்க சகலரும் தங்களது. செயற்பாட்டினை முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நகரத் திட்ட மிடல் குழுக்கூட்டம் நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

கிளி. மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நகர திட்டமிடல் கூட்டத்தில், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்,தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, வருவாய்த்துறைப்பொறுப்பாளர் மருதம், தமிழீழநிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் பிரியன், தமிழீழ காவல்துறை நடுவப் பணியக பொறுப்பாளர் மாதவன், கிளிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி,கிளி. மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, கிளிமாவட்ட சுகாதார சேவைப் பொறுப்பாளர் பா. கலைமகள், கரைச்சிப்பிரதேச செயலர் பொன்நித்தியானந்தன் செயலக காணி உத்தியோகஸ்தர் செ. சிறிரங்க நாதன், கிளிநொச்சி காவல்பணிமனைப் பொறுப்பாளர் கௌரிராசா ஆகியோர் கலந்து கொண்டனர் .

இரண்டுமணிநேரமாக நடைபெற்ற நகர திட்டமிடல் குழுக் கூட்டத்தில் நகர திட்டங்கள் குறித்து முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

அடுத்து மேற்படி குழுக் கூட்டம் நவம்பர் முதலாம் திகதி நடத்துவதென தீர்மானிக்கப் பெற்றது. (சோ)

# வட-கிழக்கு புனரமைப்புக்கு 649 மில். டொலர் நிதி உதவி

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யு.என்.எச்.சி.ஆர்., யுனிசெவ்,யுஎன்டிபி.உலக உணவு நிறுவனம், ஐரோப்பியகுழு, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன் பிரித்தானியா, அமெரிக்கா ஆகியன 649 மில்லியன் டொலரை வடகிழக்கிற்கு வழங்கியுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை மறுசீரமைப்பதற்கு இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு உலகவங்கி காரியாலயம் நேற்று பத்திரிகைக்கு தெரிவித்துள்ளது. வட-கிழக்கை புனரமைப்பதற்குபொறுப்பாக அரசாங்க- தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டமைப்பு 2002ஆம் ஆண்டுகார்த்திகை மாதம் ஒஸ்லோவில் நிதியுதவி கோரியிருந்தது இந் நிதியில் 55 பாடசாலைகளும் 25 சுகாதார பகுதிகளும் திருத்தியமைக்கப்பட்டன. 93 பாடசாலைகளும் 90 சுகாதார நிலையங்களும் 75 அரசாங்க கட்டடங்களும் 2004 ஆம் ஆண்டில் வடகிழக்கில் 12 மில்லியன் டொலரில் திருத்தியமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. 45கி.மீ. ஏ-9வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. 238 கி.மீ கிராம பாதைகள் திருத்தியமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 108 நீர்ப்பாசனக் குளங்களும் 156 கிணறுகளும் திருத்தியமைக்கப்படவுள்ளன. 2003 ஆம் ஆண்டு புரட்டாதி 30ஆம் திகதி வரை பாதிக்கப்பட்ட 32,724 குடும்பங்களுக்கு எவ்.யு.ஏ. திட்டத்தின் மூலம் 25.000 ரூபா வழங்கப்பட்டுள்ளன.

# பாம்புக் கடிக்கு இலக்காகிய மூவர் மருத்துவமனையில்

(அலுவல்க செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பாம்புக்கடிக்கிலக்கான நிலையில் நேற்று மூவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசர்கேணியைச் சேர்ந்த ப. ரவீந்திரன் (வயது-31), முறிகண்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது-53), முருகன் வீதி வட்டக்கச்சியைச் சேர்ந்த கையிலைநாதன் (வயது-40) ஆகிய மூவருமே நேற்றைய தினம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ)

# சார்பற்ற சமாதானக்குழு புலிகள்யாழ்.இல் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சார்பற்ற சமாதானத்திற்கான குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்ற மாலை யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைசெயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சார்பற்ற சமாதானத்திற்கான குழுவின் பணிப்பாளர் பிக்றொக் அவின் உதவியாளர் சாள்ஸ் மற்றும் குசைன் ஆகியோரும் விடுதலைப்புலிகள் தரப்பில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் பங்கு பற்றினர்.

இராணுவத்தினரால் யாழ் குடா நாட்டில் திட்டமிட்ட முறையில் பொதுமக்கள் மீது நடத்தப்படும் வன்முறைத் தாக் குதல் மற்றும் அடாவடித்தனங் கள் குறித்து புலிகள் எடுத்து விளக்கினர். மேலும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பெரும் எண்ணிக்கையான மக்களை அவர்களது சொந்த வீடுகளில் குடியிருக்கவிடாது படையினர் தொடர்ந்து தடைவிதித்து வருகின்றமை மிகவும் பார தூரமான விடயமாகும் மேலும் படையினர் புதிய முகாம்களை அமைப்பதாகவும் புலிகள் கூறினார்.(33)

### க.கா..

அமைந்ததாகத் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னதான காலப்பகுதியில் குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான பூரணமான விளக்கங்களை இச்சந்திப்பில் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்த அவர், ஊடகவியலாளர்களின் மற்றோர் கேள்விக்கு பதிலளிக்கையில், இராணுவ வாகன விபத்துக்களையடுத்து எழுந்துள்ள சிக்கல். நிலை தொடர்பான உறுதியான முடிவை கண்காணிப்புக்குழுவின்தலைமை வெளியிடுமெனவும் கூறினார்.

அத்துடன் குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை இனங்காண பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தான் சந்திக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (27)

### சிஹல...

தொடர்ந்து சிஹல உறுமய உறுப்பினர் அனைவரும் மீண்டும் கொழும்பிற்கு திரும்பியுள்ளனர் நேற்றுக் காலை சூரங்கல் பகுதி இராணுவ முகாமை இவர்கள் வந்தடைந்தவேளை இவர்களை மீண்டும் திரும்பிச் செல்லுமாறு படையினர் உத்தரவிட்டனர். இவர்கள் தொடர்ந்தும் குரங்குபாஞ்சான் முகாமிற்குச் செல்லும் பட்சத்தில் சமாதானத்திற்கு ஊறு ஏற்படலாம் என்ற நிலையிலேயே இவர்களை திரும்பிச் செல்லுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்குள்ள இராணுவ அதிகாரிக்கும் சிஹல உறுமய உறுப்பினர்களுக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து இங்குள்ள இராணுவ அதிகாரி பிரிகேடியர் அஜித் தலைமையில் திலக் கருணாரட்ண தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தையினை மேற்கொண்டிருந்தனர். இவ்வாறு மேற் கொண்டிருந்த வேளையிலே சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண இலங்கையின் எந்தப் பகுதிக்கும் தாங்கள் செல்ல உரிமையுண்டு என்றும் அதனைத தடுப்பதற்கு எவராலும் முடியாதென்றும் கூறினார். இராணுவத்தினர் அதனைத் தடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக கோசம் போடவும் தயார் என குறிப்பிட்டனர். இதனைத் தொடர்ந்து கொழும்பு திரும்பவுள்ள இவர்கள் தாங்கள் இந்த நடவடிக்கையை இத்துடன் நிறுத்தப் போவதில்லை எனவும் தொடர்ந்தும் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்து திரும்பிச் சென்றுள்ளனர். (32)

### அமைச்சர்கள்..

லங்கா தலைவர்களையும் அவர் சந்திப்பார். இதேவேளை, கனேடிய வெளியுறவு அமைச்சர் பில் கிரகாம் யாழ். இற்கும் விஜயம் செய்வார். (32)

### இராணுவ...

பொறுப்பாளர் கலைவிழி மற்றும் கல்விக் கழகப்பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மீன்பிடித் தொழிலில் படைத்தரப்பு கடைப்பிடித்துவரும் கெடுபிடிகள், அதியுயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்ட பகுதிகளில் இடம்பெயர்ந்த அப்பகுதி மக்களை மீளக் குடியமர அனுமதி மறுத்து வருகின்றமை, புதிது புதிதாக முகாம்கள் மற்றும் காவலரண்களை அமைத்தல் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக தான் விளக்கிக் கூறியிருந்ததாகவும் சி. இளம்பரிதி பின்னர் ஊடகவியலாளர்களிடையே பேசுகையில் கருத்துத் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இச்சந்திப்பு நீடித்தது. (27,33)

### டென்மார்க்..

நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற் றர்சன் உட்பட பலமுக்கிய தலை வர்களைச் சந்திக் கவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பில் டப்ளின்நகரில் விடுதலைப்புலிகள் தயாரித்த இடைக்கால நிர்வாகத்திட்டத்திற்கான மாற்று யோசனை கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.






### சாவடைந்த...

இணங்கிப் புலிகள் நேற்றுக் காலை வித்துடலினைக் கொண்டு வந்தபோது இராணுவம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ அனுப்பிய கடிதத்தில் 20 பொதுமக்களை அனுமதிக்குமாறும், கூட்டம் கூடக்கூடாது என்றும், ஒலிபெருக்கி உபயோகிக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டுள்ளார்.

இதன்பின்னர் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் கொண்டு செல்ல முன்னர் ஈச்சங்குளம் பாடசாலையில் மக்களின் இறுதி வணக்கத்திற்கு வைக்க வேண்டுமென்று தெரிவித்தபோது இதற்கும் இராணுவம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

என்ன பிரச்சினை வந்தாலும் பொறுப்பினை மக்கள் ஏற்றுக் கொள்வதாகவும், ஈச்சங்குளம் பாடசாலையில் கல்வி கற்ற மாணவனின் வித்துடலை வைக்கத் தமக்கு உரிமையுண்டு என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். இதன் பின்னர்,

இராணுவம் பொலிசாரின் கடுமையான கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் மத்தியில் இறுதி நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரை போராளியின் தாயார் ஏற்றினார். கொள்கை முன்னெடுப்புப் போராளி திருவடி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வவுனியா மாவட்ட மகளிர் பொறுப்பாளர் அலை, வவு. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். பல நூற்றுக்கணக் கான மக்கள் மத்தியில் போராளிகளின் இராணுவ மரியாதையுடன் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது. (21)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.